1973 டிசம்பர் 3]

போல் நகரசபைப் பள்ளிகளிலிருந்து தனியார் பள்ளிகளுக்கு வந்தாலும், அவர்களுடைய சர்வீஸைச் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே, பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. நாமாகப் பார்த்து சில தனியார் பள்ளிகளிலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றபோது, அவர்களுடைய பணிக் காலத்தைச் சேர்த்துக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்களாக வரும்போது, அவர்களை எந்த இடத்தில் வைப்பது, ஏற்கனவே இருப்பவர்கள் எந்த இடத்திலே அவர்களை ஏற்றுக்கொள்ளு வார்கள் என்று பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, கூடுமான வரை எந்த அளவுக்கு விதிகளைத் தளர்த்திட வேண்டிய அவசியம் இருக் கிறதோ அந்த அளவிற்குச் செய்து அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படு கிறார்கள். பொதுவாக விதிகளை நிர்ணயிக்க வேண்டுமென்றால், தனியாக அதுபற்றி ஆராய்ந்து யாருக்கும் எந்த இடையூறும் ஏற்படாத வகையில் நிறைவேற்ற வேண்டும்.

Hostel accommodation for students in the Periyar E. V. R. Government College, Tiruchirappalli.

*180. *Q.* THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the hostel accommodation provided for students in the Periyar E. V. R. Government College, Tiruchirappalli is not sufficient ; and

(*b*) if so, the steps taken by the Government to improve accommodation facilities?

திருச்சிராப்பள்ளியிலுள்ள பெரியார் ஈ. வெ. ரா. அரசினர் கல்லூரி மாணவரில்லத்தில் இடவசதி.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள பெரியார் ஈ.வெ.ரா. அரசினர் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாணவரில்லத்தில் போதுமான இடவசதி இல்லையென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இடவசதிகளைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கூடுதல் விடுதிக் கட்டிடம் கட்டும் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.